# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

**Part – II (3rd Year) Examination in Bachelor of Business Administration – 2010/2011**

**(Proper/Repeat) (August / September/ October 2015)**

## EXB 303 Management Information System

12 OCT 2015

**Answer all questions** **Time: 03 Hours**

---

**Q1.** பின்வரும் விடய கற்கையினை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

**Wal-Mart Online**

Wal-Mart என்பது அமெரிக்காவில் இயங்கிவரும் ஒரு பாரிய நிறுவனமாகும். களஞ்சியசாலையின் எண்ணிக்கையிலும் சரி (2011 யில் உலகத்தில் 8,970) விற்பனையிலும் சரி (2011ம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையின் படி $419 billion) அதிகமாகவே காணப்பட்டது. தனது வழங்குனர்களை தொடர்ச்சியாக விலைக்குறைப்பை மேற்கொள்ளும்படி அறிவுறுத்தியதன் விளைவாக Wal-Mart ஆனது மிகவும் குறைந்த விலையில் பொருட்களை வழங்குவதாகவும் அதன்மூலம் வாடிக்கையாளர்களை கவர்ந்ததொன்றாகவும் காணப்படுகின்றது. தன்னுடைய சில்லறை வர்த்தகத்தினை ஆரம்பித்ததன் மூலம் அமெரிக்காவில் மிகப்பெரிய சில்லறை வர்த்தகமாக காணப்பட்டது. ஒரு கிழமையில் கிட்டத்தட்ட 100 million மக்கள் இவர்களது கடைக்கு வருகை தருவார்கள்.

ஆயினும் Wal-Mart இலத்திரனியல் வர்த்தகத்தில் (online) பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியது. அங்கு பல்வேறுபட்ட பௌதீகப்பொருட்களையும் இலத்திரனியல் சார் பொருட்களையும் விற்று வந்தது. இலத்திரனியல் புத்தகங்கள், இசை மற்றும் திரைப்படங்கள் உட்பட பல்வேறு பிரிவுகளை அறிமுகம் செய்தது. ஆயினும் Amazon நிறுவனம் பாரியளவில் வளர்ந்து இலத்திரனியல் வர்த்தகத்தை ஆரம்பித்ததன் மூலம் Wal-Mart நிறுவனமானது பல்வேறுபட்ட சவால்களுக்கு உட்பட்டது. மேலும் Amazon நிறுவனமானது விற்பனையில் பாரிய பங்கை எடுத்ததுடன் தானும் ஒரு பெரிய நிறுவனமாக நாளடைவில் வளர்ந்தது. இந்நிலையில் Wal-Mart நிறுவனமானது ஏதேனும் தவறுகள் புரிகின்றதா? அல்லது விற்பனையில் பாரிய பங்கை எடுக்க Wal-Mart எவற்றை செய்ய வேண்டும் என்ற கேள்வி எழும்புகின்றது.

## பின்னணி

பல்வேறு கட்டுரைகள் Wal-Mart நிறுவனத்தைக் குறித்து குறிப்பிட்டுள்ளன. இந்நிறுவனத்தின் விற்பனை நிலையங்களைக் குறித்து வாடிக்கையாளர்கள் அறிந்திருந்தனர். ஆயினும் பாரியளவான இருப்புக்கள், விநியோகத்தர்கள், விலையிடல், வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. Wal-Mart நிறுவனமானது தகவல் முறைமை மூலம் விலைக்குறைப்பினை மேற்கொள்ளும் முன்னோடியாகக் காணப்பட்டது. வாடிக்கையாளர்களுக்கு தேவைப்படும் பொருட்களை சரியான பொருட்களை சரியான விலையில் தன்னுடைய விற்பனை நிலையங்களில் வழங்குகின்றது. ஆயினும் வெற்றி பெற ஒவ்வொரு நிலையத்திலும் பொருட்களுக்கான கேள்வி எந்நிலையில் உள்ளது என அறிய வேண்டியது இந்நிறுவனத்தின் வெற்றிக்கு வேண்டியதொன்றாக உள்ளது. ஒவ்வொரு பொருட்களும் நிறம் மற்றும் அளவுகளில் வேறுபட்டுக் காணப்படுகின்றது. ஒவ்வொரு பொருட்களும் அதனது SKU (stock-Keeping Unit, pronounced "Skew") இலக்கத்தினால் அறியப்படும். ஒவ்வொரு Wal-Mart நிறுவனத்திலும் இவ்வாறான பல்லாயிரம் இலக்கங்கள் காணப்படும். இவ்விலக்கங்கள் அனைத்தும் தகவல் முறைமையினால் கண்காணிக்கப்படும். கடனட்டைகள் மூலமாக மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட கொள்வனவுகளும் இவ்விலக்கங்கள் மூலம் கண்காணிக்கப்படும். இத்தரவுகள் மத்திய தகவல் முறைமைக்கு ஒவ்வொரு நாளும் அனுப்பப்படும்.

Wal-Mart நிறுவனத்தின் பிரதம தகவல் உத்தியோகத்தரின் கருத்துப்படி, Wal-Mart நிறுவனமானது முன்னேறுவதற்கு பல்வேறு உத்திகளை கையாள வேண்டியது அவசியமாகும். அவ்வுத்தியோகத்தரினது இலக்குகளானது (தகவல் முறைமை தொடர்பில்):

1. மத்திய முறைமை ஒன்றினை நடைமுறைப்படுத்தல்
2. பொதுவான தரவுத்தளம்
3. முதலாவது விற்பனையாளர், இரண்டாவதே தொழில்நுட்பவியலாளர்

விலைக்குறைப்பை மேற்கொள்ள இவரது முதல் இரு நிலைமைகளும் முக்கியமாக காணப்படுகின்றது. இதன் மூலம் விற்பனை நிலையங்களுக்கு பணியாளர்களை மாற்றுவதும் இலகுவாகும். ஆயினும் நியமமான முறைமையானது பிரயோகிக்கப்படும் சந்தர்ப்பத்தில் பாரிய சவால்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். ஆயினும் நெகிழத்தக்க முறைமையினை பிரயோகிக்கும் சந்தர்ப்பத்தில் பல்வேறு நாடுகளில் காணப்படும் முகாமையாளர்கள் பன்முகப்படுத்தப்பட்ட முடிவுகளை மேற்கொள்ள உதவியாக இருக்கும். ஆயினும் இங்கு மத்திய தகவல் முறைமைகள் பிரயோகிக்கப்படும்.

2002யில் Wal-Mart நிறுவனமானது bar codesற்குப் பதிலாக RFIDயைப் பாவித்து விலைக்குறைப்பை மேற்கொள்ள முனைந்தது. இவ்வகையான bar codesயைப் பாவிப்பதன் மூலம் பொருட்களை இலகுவாகவும் விரைவாகவும் அடையாளம் காண

உதவும். ஆயினும் பொருட்களைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கும். ஆயினும் இங்கு RFID காணப்படும் சந்தர்ப்பத்தில் பொருட்களை கண்டுபிடிப்பது இலகுவாகும். Wal-Mart யின் தொழில்நுட்பமானது மிகவும் உபயோகம் உள்ளதாகக் காணப்பட்ட போதிலும் மேலும் திருத்தப்பட வேண்டியதொன்றாகக் காணப்படுகின்றது.
மேலும் மத்திய தகவல் முறைமையானது (RetailLink) விநியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமையால் உற்பத்திக்கு உதவும் முகமாக நிகழ்நேர கண்காணிப்பினை மேற்கொள்ள முடியும். மேலும் தங்களது பொருட்கள் எவ்விடத்தில் காணப்படுகின்றது என கண்காணிக்கவும் முடியும்.
மேலும் Wal-Mart நிறுவனமானது தனது இணையத்தளத்தில் இசையினை பதிவிறக்கம் செய்வதை தடுத்தது. அத்துடன் ஒவ்வொரு நாடுகளுக்கும் தனித்தனி முகாமையாளர்களை போதுமான அதிகாரங்களுடன் இணைத்துக்கொண்டது. ஆச்சரியமான விதத்தில் இணைய தள மூலமான விற்பனையையும் முன்னெடுத்துச் சென்றது. அத்துடன் Vudu தொழில்நுட்பத்தின் மூலம் திரைப்படங்களுக்கான பதிவிறக்கங்களை இலகுவாக்கியது.

இவ்வாறான விடயங்கள் காணப்பட்டபோதிலும் Amazon நிறுவனமானது தனது வலையமைப்பினை விரிவாக்கி இன்றும் Wal-Mart நிறுவனத்திற்கு அதிதீவிரமான போட்டியினை உருவாக்கியுள்ளது.

**வினாக்கள்**

**i)** Wal-Mart நிறுவனத்தின் இணையத்தளமானது எவ்வாறு Amazon நிறுவனத்தின் இணையத்தளத்தில் இருந்து வேறுபடுகின்றது என விளக்குக.

**(07 Marks)**

**ii)** இணைய தள வர்த்தகத்தில் Wal-Mart எதிர்நோக்கிய பிரச்சினைகளை அடையாளம் காண்க.

**(07 Marks)**

**iii)** Wal-Mart யினது விற்பனை நிலையங்களினதும் இணையத்தளத்தினதும் தன்மைகளை இணங்கண்டு விளக்குக.

**(07 Marks)**

**iv)** Wal-Mart ற்கு தகவல் தொழில்நுட்ப மாணவர் என்ற வகையில் எவ்வகையான தந்திரோபாயத்தை இணைய தள வர்த்தகத்தை விஸ்தரிக்க விதந்துரைப்பீர் என விளக்குக.

**(07 Marks)**

**(Total 28 Marks)**

**Q2.** **i)** தகவல் தொழில்நுட்பம் என்றால் என்ன என குறிப்பிட்டு போட்டியினை எதிர்கொள்ள தகவல் தொழில்நுட்பமானது எவ்வாறு உதவுகின்றது என உதாரணங்களுடன் விளக்குக.

**(06 Marks)**

**ii)** தகவல்தொழில்நுட்பமானது உற்பத்தித்திறனை முன்னேற்றும் சந்தர்ப்பத்தில் தோற்றுவிக்கும் எதிர்மறையான விளைவுகளை விளக்குக.

**(06 Marks)**

**iii)** தகவல் நிரற்படுத்தல் இலக்குகளையும் அதற்கான கருவிகளையும் சுருக்கமாக விளக்குக.

**(06 Marks)**

**(Total 18 Marks)**

**Q3.** **i)** "பரிமாற்ற முறைவழியாக்கல் முறைமையானது (Transaction Processing System) நிறுவனங்களின் நாளாந்த தொழிற்பாடுகளுக்கு ஆதரவாக செயற்படுகின்றனவாகும்". பரிமாற்ற வழிமுறையாக்கல் எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

**(06 Marks)**

**ii)** "தீர்மான ஆதரவு முறைமையானது (Decision Support System) பல்வேறு கூறுகளைக் கொண்டு காணப்படுகின்றது". தீர்மான ஆதரவு முறைமையின் கூறுகளை சுருக்கமாக விளக்குக.

**(06 Marks)**

**iii)** நிறைவேற்றுத் தகவல் செயன்முறையானது (Executive Information System) எவ்வாறு செயற்படுகின்றது என வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

**(06 Marks)**

**(Total 18 Marks)**

**Q4.** **i)** "ஒரு தொழில் நிறுவனத்தின் தொழிற்பாடுகளான நிதி, சந்தைப்படுத்தல், உற்பத்தி, மனித வள முகாமைத்துவம் போன்றவை ஒரு நிறுவனத்தின் தொழிற்பாட்டுப் பகுதிகளில் காணப்படும் தகவல் முறைமைப் பிரயோகங்களாகும்". அவ்வாறான ஏதேனும் ஒரு தகவல் முறைமையினை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

**(06 Marks)**

**ii)** நவீன உலகில் தகவல் தொழில்நுட்பமானது எவ்வாறு உற்பத்தித்திறனை முன்னேற்றுவதில் பங்களிப்புச் செய்கின்றது என தற்கால உதாரணங்களுடன் விளக்குக.

**(06 Marks)**

**iii)** பின்வரும் விடயங்களை சுருக்கமான விளக்குக.

1. **Dialog EZ cash**
2. **Google Map**
3. **Facebook**

**(03 * 02 Marks = 06 Marks)**

**(Total 18 Marks)**

**Q5.** **i)** "ஒரு கைத்தொழிலில் தகவல் தொழில்நுட்பத்தின் தாக்கத்தினை ஆய்வு செய்வதற்கு Porter உடைய ஐந்து சக்திகள் மாதிரியினை பயன்படுத்த முடியும்". Porter உடைய ஐந்து சக்திகள் மாதிரியினை விளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக.

**(06 Marks)**

**ii)** "ஒரு நிறுவனம் ஐந்து போட்டிக்குரிய சக்திகளினை எதிர் கொள்வதற்கு வசதியாக பலவகையான போட்டி அடிப்படையிலான தந்திரோபாயங்களினை உருவாக்கலாம்". அவ்வாறான போட்டிக்குரிய தந்திரோபாயங்கள் நான்கினை (04) சுருக்கமாக விளக்குக.

**(06 Marks)**

**iii)** பின்வரும் எண்ணக்கருக்களை சுருக்கமாக விளக்குக:

a. தொகுதி முறைவழியாக்கம் - **Batch Processing**
b. நிகழ் நேர முறைவழியாக்கம் - **Real Time Processing**

**(2 * 03 Marks = 06 Marks)**

**(Total 18 Marks)**